# பாகவத மேளா – தமிழர்களின் செவ்வியல் நாட்டிய மரபு

***சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்***
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*நிகழ்கலைத்துறை*
*புதுவைப் பல்கலைக்கழகம்*
*புதுச்சேரி*

***முனைவர் மு. சுப்பையா***
*உதவிப் பேராசிரியர்*
*நிகழ்கலைத்துறை*
*புதுவைப் பல்கலைக்கழகம்*
*புதுச்சேரி*

**அறிமுகம்**

கலைகளில் சிறந்த தமிழகம் என்று அகிலமே போற்றும் வண்ணம் பண்டைய காலத்தில் நமது தமிழ்நாடு பலவித கலைகளிலும் உயர்ந்தோங்கி இருந்தது. இயல், இசை, நாடகம் என்று எந்த ஒரு கலையிலும் புராணக் கதைகளின் சாரத்தைப் புகுத்தி, குடிமக்கள் பக்தி நெறியுடன் வாழ்ந்து வருவதற்கு அன்றைய அரசர்கள் அரும்பாடுபட்டார்கள். அவ்வப்போது நாட்டு மக்களை அரண்மனைக்கும் ஆலயங்களுக்கும் திரளாக வரவழைத்து 'புராணக் கதைகளைப் பொதுமக்கள் எந்தக் காலத்திலும் மறந்துவிடக் கூடாது… அவற்றைத் தங்கள் வாரிசுகளுக்கும் கொண்டு செல்ல வேண்டும்' என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவற்றைப் பாடல்கள் வழியாகவும், நாட்டிய நாடகங்கள் வழியாகவும் சொல்லி வந்தார்கள்.

சங்கீத மும்மூர்த்திகள் என்று சொல்லப்படும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஸ்திரி, முத்துசாமி தீட்சிதர் ஆகியோர் அவதரித்த தஞ்சாவூர் மண்ணுக்குக் கலைகளின் வாசம் என்றென்றும் சற்று அதிகமே. இந்த வகையில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலியமங்கலம்,மெலட்டூர் என்கிற சிற்றூர்களுக்கு தனிப் பெருமையே உண்டு.

காரணம்- கடந்த 1645-ஆம் வருடம் முதல் தற்போது வரை- அதாவது சுமார் 362 ஆண்டுகளாக- இந்த ஊரில் ஸ்ரீ நரசிம்ம ஜயந்தி உற்சவம் ஒவ்வொரு வருடமும் விமரிசையாக நடைபெற்று வருகிறது. இதில் ஸ்ரீ பக்த பிரகலாதன் கதை நாட்டிய நாடகமாக ஒவ்வொரு வருடமும் பிரமாதமாக நடந்தேறுகின்றது.

இரவு சுமார் பத்து மணிக்குத் தொடங்கும் இந்த நாட்டிய நாடகம், விடிய விடிய நடந்து அதிகாலை வேளையில் நிறைவுறும். இரண்யன், அவன் மனைவி லீலாவதி, இவர்களின் மகன் பிரஹலாதன் போன்றோரின் வாழ்க்கையை நாட்டிய நாடகமாக இதே ஊரைச் சேர்ந்த பரம்பரை பரம்பரையாக பங்கேற்று வரும் கலைஞர்கள் நடித்துக் காட்டுவார்கள்.இந்நாட்டிய நாடக முறையினை **பாகவத மேளா** என்று அழைப்பார்கள்.

இக்கட்டுரை பாகவத மேளா என்னறால் என்ன? தமிழகத்தில் இந்நாடக முறை எவ்வாறு வளர்ந்து வந்தது? இம்மரபை வளர்தெடுத்தவர்கள் யார்? இம்மரபு எவ்வாறு ஆடப்பட்டு வருகின்றது என்பதை உள்ளடக்கியதாக அமைகின்றது.

பாகவத மேளா என்பது தமிழர்களின் செவ்வியல் மரபுக்கலைகளுள் ஒன்றாகும். இயல் இசை, நாடகமெனும் தமிழின் முப்பரிமாணங்களுள் நாடகம் சார்ந்த நடன வெளிப்பாட்டு வடிவம். இசையும் இயலும் இயல்பாகவே அதில் இடம்பெறுவதுடன் நிகழ்த்துக்கலை என்ற வகையில் சிறப்பிடம் பெற்றது. தமிழகம் மட்டுமன்றி இந்திய அளவிலான பழைமையான நாட்டிய நாடக மரபினை இக்கலை இணங்காட்டுவதாக விளங்குகிறது.

பாகவதப் பரம்பரையில் வந்தவர்கள் இதைத் தொடர்ந்து நாட்டிய நாடகமாக அரங்கேற்றியதால் "பாகவத மேளா நாடகம்" என அழைக்கப்பெற்றது.

வைணவ வழிபாட்டு மரபில், இலட்சுமி நரசிம்மருக்கு அவரது அடியார்கள் வழங்கும் கொடையாக பாகவத மேளா உருவகம் கொண்டுள்ளது. இறையன்பினை முன்னிறுத்தி, திருமால் தொடர்பான மாக்கதைகளுள் ஒன்றினை வேடம் புனைந்து, இசை, ஆடல், பாடல் இணையப்பெற்று, இரவுமுழுவதும் ஆடவர்களே நிகழ்த்தும் தொழில்முறையல்லாத அரங்கக் கலை பாகவத் மேளாவாகும்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நல்லூர், மெலட்டூர், சூலமங்கலம், ஊத்துக்காடு, சாலியமங்கலம், மன்னார்குடி, தேப்பெருமாநல்லூர், காரிமங்கலம் போன்ற ஊர்களில் பெரு வழக்கிலிருந்தது. இக்கலை பெரும்பாலும் மறைந்து போய் இன்றைய நிலையில் சாலியமங்கலம், தேப்பெருமாநல்லூர், மெலட்டூர் ஆகிய ஊர்களில் மட்டுமே நடைமுறையில் உள்ளது.

தேவதாசி ஒளிப்புச்சட்டத்தின் பின் அழியும் நிலையிலிருந்த இக்கலையினைக் காப்பாற்றிய பெருமை மெலட்டூரைச் சாரும். அதன் காரணமாகவே “மெலட்டூர் பாகவத மேளா’’ என அடைபொழியுடன் இந்நாட்டிய நாடகம் புகழ் பெற்றுள்ளது.

பாகவத மேளம் பழம்மரபுவழிவந்த ஒரு நாட்டிய நாடகமாகும். இது பாகவத பஜனை சம்பிரதாயப்படி இலட்சுமி நரசிம்ம ஜெயந்தி அன்று அவரது பக்தர்கள் வழங்கும் நாடகாஞ்சலி முறை.

பாகவத மேள நாட்டிய நாடகம் போன்ற கலைகளின் நோக்கம் இரு வகைப்பட்டதாகும். முதலாவதாக, இது கடவுளுக்கு அர்ப்பணிக்கப்படும் ஒரு கலைக்கொடையாக விளங்கியது. இக்கலைகளின் வாயிலாக அடிப்படையான ஆன்மிகஇயல் மற்றும் தத்துவ இயல் சார்ந்த உண்மைகளை மக்கள் மனதில் நிலைபெறச் செய்வது. இரண்டாவதாக, இறையன்பின் அடிப்படையில் நல்லொழுக்கமும், அழகு உணர்வும், மக்கள் மனத்தில் நிலைபெற இக்கலைகள் உதவின எனவே இத்தகைய நாட்டிய நாடகங்கள் வெறும் பொழுதுபோக்குக் கலையாக அமையாது, சீரிய முறையில் உயர்ந்த நோக்கங்களை உள்ளடக்கியதாக உள்ளன.

பாகவத புராணத்தைப் படித்து அது சொல்லும் நீதிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்கின்ற கிருட்டிணப் பக்தர்கள்தான் ‘பாகவதர்கள்’ என்று அழைக்கப்படுகின்றனர். பக்தர்கள் குழுவாகக் கூடி, இசைக் கருவிகளுடன் இறைவனைப் புகழ்ந்து பாடிக்கொண்டே தெருக்களில் ஆடியும், பாடியும் செய்து பஜனை மரபில் அமைந்த நீட்சி அல்லது வளர்ச்சிநிலையையே ‘பாகவத மேள நாட்டிய நாடகங்கள்’ என்பர்.

பக்தியின் அடிப்படையில் இறைவனைப் புகழ்ந்து பாடி, ஆடி மகிழ்ந்து பாகவதர்கள் பங்கேற்று நடித்த நாட்டிய நாடகங்களே ‘பாகவத நாட்டிய மேளா நாடகங்கள்’ என்று அழைக்கப்படுகின்றன. பாகவத புராணத்தை எழுதிய **‘சுக பிரும்மம்’** என்பவரையும் மக்கள் **பாகவதர்** என்றே அழைத்துக் கொண்டனர்.

திருமாலின் மீது அளவற்ற அன்பு பூண்டிருந்த பிரகலாதன், நாரதன், வியாசர், கம்பரிசர்,சுகன், சௌநகர், பீசுமர், ருக்மாங்கதன், அருச்சுனன், வசிட்டர், விபீடணன், பௌண்டரீகர் ஆகிய பன்னிரண்டு பேரும் ‘பரம பாகவதர்கள்’ என்று அழைக்கப்படுகிறார்கள்.

கட்டுக்கோப்புடன் குழுவாக இயங்கும் நிலை **“மேளா“** எனப்படும். திருமாலன்பர்கள் ஒன்று கூடி கட்டுக்கோப்பாக நடத்தும் நாட்டிய நாடகம் “பாகவத மேளா“ எனப் பெயர் பெற்றது.

**வரலாறு**

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பிறகு தென்னிந்தியாவின் பல பெரிய கோயில்கள் தங்களுக்கென நாடக அரங்குகளைப் பெற்றிருந்தன. எனவே ஆயிரக்கணக்கான கலைஞர்கள் இறைவன் முன்னிலையில் தங்கள் பக்தியைச் செலுத்தினார்கள். இவர்கள் காலத்தில் பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடும் ‘நட்டுவ மேளம்’ என அழைக்கப் பெற்ற சதிர் நடனம் வழக்கில் இருந்தது. இந்த நடன வகை தேவதாசிகளுக்கு உரிய ஒரு மரபாகப் போற்றி வளர்க்கப்பட்டது. எனவே மன்னர்கள் செவ்விசை நாட்டிய நாடகக் கலைக் குழுக்களுக்கும் ஆதரவு அளித்தனர். பாகவத மேளம் என்ற கலைக்கும் இதைப் போன்ற பிற கலைகளுக்கும் தஞ்சையை ஆண்ட மன்னர் கொடுத்து வந்த ஆதரவு தொடர்ந்து கிடைத்தது.

பாகவத மேள நாடக மரபு கி.பி 1502 ஆம் ஆண்டில் ஆந்திராவில் நிலவி வந்துள்ளதற்கான சான்றுகள் விசயநகரப் பேரரசு பற்றிய ஆவணங்களில் கிடைக்கின்றன.

தஞ்சைப் பகுதியை ஆண்டு வந்தவர் அச்சுதப்பநாயக்கர். அந்தக் காலகட்டத்தில் அந்நியர்கள் நமது மண்ணில் தங்களது கலாசாரத்தை நிலை நாட்ட முயன்றனர். இதைக் கண்டு கவலைப்பட்ட அச்சுதப்பநாயக்கர், பாரத நாட்டின் பாரம்பரியமான கலைகளை மக்களுக்கு அவ்வப்போது சொல்லி வந்தால், அந்நியக் கலாசாரம் அதிகம் ஊடுருவாமல் தவிர்த்து, நம் பண்பாட்டின் மீது ஒரு பிடிப்பை ஏற்படுத்தலாம் என்று தீர்மானித்தார். எனவே, பழம்பெரும் கலைகள் வளர நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

மன்னர் அச்சுதப்பநாயக்கர் தஞ்சையை ஆண்டபோது, ஆந்திராவிலிருந்து 510 அந்தணக் குடும்பங்களைத் தஞ்சைக்கருகிலுள்ள அச்சுதபுரத்திலே – மெலட்டூரிலே குடியமர்த்தி, அவர்களுக்கு மாநியங்களாக வீடும், நிலங்களும் தானமாகக் கொடுக்கபட்டது. அவர்கள் தமது நடன நாடகங்கள் மூலம் சமயப்பிரசாரம் செய்யத்தொடங்கினர்.

கிருஷ்ண லீலா தரங்கினி ஆசிரியரான **வரகூரில் வாழ்ந்த நாராயண தீர்த்த யோகி** என்பவர் குரு பஜனை மரபினை பேணிவந்தார். (தரங்கங்கள் என்பது பாடல்கள்) இவருடைய தரங்கங்கள் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தது. பரதரின் நாட்டியசாஸ்திரம் கூறும் நடன நாடக மரபையொட்டி பாகவத மேள மரபை உருவாக்கினார்.

பாகவதம் கூறும் தத்துவக் கருத்துக்கள், பரத நாட்டியம், அபிநயம், சாஸ்திரிய இசை முதலியன நாடக மூலமாக வழங்கும்போதுதான் இறைவனிடத்தில் உன்மையான பக்தி ஏற்படும் என அவர் கருதினார். இவரின் நாட்டிய நாடகத்தை சிஷ்யர்கள் கிருஷ்ணனுடைய பிறந்த நாளான ஜன்மாஷ்டமி தினத்தன்று ஆடிப்பாடி அபிநயித்துக் காட்டினர். அப்போதிருந்தே மே மாத மத்தியில் வரும் நரசிம்ம ஜெயந்திக்கு ஒவ்வொரு வருடமும் இந்த பாகவதப் பரம்பரையில் வழிவழியாக வந்தவர்கள் நாட்டிய நாடக விழாக்களை வரதராஜப் பெருமாள் கோயிலின் முன்பு நடத்தி வந்தனர்.

பக்தியினைப் பரப்ப மேலும் பல நடனநாடகங்களை இவர் இயற்றினார். இவரின் சிஷ்யரான கோபால கிருஷ்ண சாத்திரி, புகழ்பெற்ற அரசவை இசைக்கலைஞர் ஆவார். இவர் சீதா கல்யாணம், ருக்மணி கல்யாணம் முதலிய, நடனநாடகங்களை இயற்றியுள்ளார். இன்று நடைமுறையில் உள்ள பாகவத மேளா பாணியைத் தொடங்கியவர் இவர் எனக் கருதப்படுகின்றது.

தஞ்சையை மராட்டியர்கள் ஆண்டபோது, உயர்தர நாட்டியம் ஆடிவந்த நால்வர் அணி (பொன்னையா, சின்னய்யா, சிவானந்தம் மற்றும் வடிவேலு) இந்தப் பாகவத மேளா நாட்டிய நாடகத்தைச் சிறப்பாக நடத்த முயற்சி செய்து பார்த்தது. எனினும், பாகவதர்கள் வழங்கும் நாடக அமைப்புதான் பொருத்தமாகவும் இயற்கையாகவும் அமைந்தது.

பாகவத மேளா நாடகத்தில் பெண்கள் வேடத்தைக்கூட, பிராம்மண குலத்தைச் சேர்ந்த ஆண்களும் இளம் சிறார்களுமே ஏற்று நடித்த காரணத்தால் “பாகவத மேளம்“ என்ற சிறப்புப் பட்டத்தைப் (நட்டுவனார் மற்றும் தேவதாசி சமூகங்கள் “நட்டுவ மேளம்“ எனப் பெற்றமைக்குப் போட்டி போன்று) பெற்றது.

நாயக்கர் காலத்தில் இக்கலை தஞ்சாவூருக்கு அருகில் உள்ள சூலமங்கலம், ஊத்துக்காடு, நல்லூர், சாலிய மங்கலம், தேப்பெருமாள் நல்லூர் என்ற கிராமங்களிலும் நிகழ்த்தப் பெற்றுள்ளது. அவரைத் தொடர்ந்து மெலட்டூர் வெங்கட்ராம சாத்திரி, நடேச அய்யர், சீதாராம பாகவதர், சூலமங்கலம் வைத்தியநாதர், கிருட்டிணசாத்திரி, நல்லூர் நாராயணசுவாமி, பாலுபாகவதர், பஞ்சநாத பாகவதர் உள்ளிட்ட பலர் இக்கலையினை வளர்த்தெடுத்து அதன் வாழ்வுக்கும், வளத்துக்கும் தமது வாழ்நாளை ஈந்தவர்களாவர்.

அப்போது சாலியமங்கலம், மெலட்டூர், ஊத்துக்காடு, தேப்பெருமாநல்லூர், சூலமங்கலம் ஆகிய ஊர்களில் ஶ்ரீ பக்த பிரஹலாதா நாடகத்தைப் பிரபலப்படுத்தி, நரசிம்ம ஜயந்தியைக் கோலாகலமாகக் கொண்டாடுமாறு அதற்குரிய நிதி ஆதாரங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார் அச்சுதப்பநாயக்கர் (தற்போது சாலியமங்கலம் மற்றும் மெலட்டூரில் மட்டுமே இந்த வைபவம் நடந்து வருகிறது). அச்சுதப்பநாயக்கர் காலத்தில் தொடங்கிய இந்த நரசிம்ம ஜயந்தி உற்சவம், சாலியமங்கலத்தில் தொடர்ந்து வருடா வருடம் இன்றளவும் நடைபெற்று வருகிறது.

காலப்போக்கில் இங்கெல்லாம் இந்நாடகம் நின்றுபோயிற்று. தற்போது மெலட்டூர், சாலியமங்கலம் என்ற இரு இடங்களில் மட்டும் நரசிம்ம ஜெயந்தி தினத்தன்று நடைபெற்று வருகின்றது.

மெலட்டூரிலும் இந்நாடக மரபு ஏற்ற இறக்கங்களைச் சந்திக்க நேரிட்டது. 1931இல் நடேசய்யர் இறந்தமையால் சில காலம் நாடகம் நடத்தப்பெறாமல் இருந்தது. இவரது சீடராகிய கோதண்டராமையர் எடுத்துக்கொண்ட முயற்சியால் மறுபடியும் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு நாடகங்கள் நடைபெற்றன. மீண்டும் இம்மரபு அறுபட்டது. பின்னர் 1936இல் பாலு பாகவதர் இக்கலை வளர அரும்பாடுபட்டார். கி.பி.1951இல் அப்போதைய தமிழ்நாடு இயலிசை நாடக மன்றச் செயலாளராக இருந்த கிருட்டிணயர் இக்கலைக்குப் புத்துயிர் ஊட்டினார். இக்கலைக் குழுவை அங்கீகாரம் பெற்ற கலைக்குழுவாக மாற்றி, தமிழ்நாடு இயலிசை நாடக மன்றத்தின் பொருளுதவியைப் பெற்றுத்தந்து இக்கலையின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார். தற்பொழுது இந்நாடகம் மெலட்டூரில் இரு இடங்களில் நடைபெற்று வருகிறது.

திரு.நடராசன் குழுவினர் கோவில்களிலும் திரு.மகாலிங்கம் குழுவினர் வயல்வெளியிலும் இந்நாடகங்களை நடத்தி வருகின்றனர். பக்தியில் முகிழ்த்த, பழமையான நாடக மரபைப் பின்பற்றிய செவ்வியல் நாடகங்களாக இவை அமைந்துள்ளன.

நாயக்கர் காலத்தில் துவக்கிவைக்கப்பட்டதாலோ என்னவோ, அப்போதில் இருந்தே தெலுங்கு மொழியில் இந்த 'பாகவத மேளா' உற்சவம் நடந்து வருகிறது. சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபெறும் இந்த நாடகத்தில் பங்குகொள்ளும் அனைத்துக் கலைஞர்களுமே உள்ளூரார்க்காரர்கள்தான். இன்று வெளியூரில் வசித்து வருபவர்கள் என்றாலும், இந்த ஊரைப் பூர்வீகமாகக் கொண்டிப்பவர்கள்.

### சடங்கு

இந்த நாடகத்தில் பிரதான இடம் வகிப்பது இரண்டு முகங்கள் (முகமூடிகள்). இதை ஸ்வாமி என்றே சொல்கிறார்கள். அவை: அத்தி மரத்தால் ஆன ஸ்வேத விநாயகர், ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் ஆகியவை. இந்த இரண்டு முகங்களுக்கும் நித்ய வழிபாடு உண்டு. மிக ஆசாரமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வழிவழியாக இந்த பூஜையை நடத்தி வருகிறார்கள். திருவிழா நேரத்தில் இந்த ஸ்வாமி முகங்களை தெருவில் உள்ள வசந்த மண்டபத்தில் எழுந்தருளச் செய்கிறார்கள். நரசிம்ம ஸ்வாமி பிம்பத்துக்கு பிராணப்ரதிஷ்டை, கண் திறத்தல், தீபாராதனை போன்ற வைபவங்கள் நடைபெறும்.

அதன்பின் ஸ்ரீ பூமிநீளா சமேத ஸ்ரீ நிவாஸப் பெருமாளுக்கு வசந்தமாலை சாற்றி இரவு எட்டு மணிக்கு கருட வாகனத்தில் வீதிஉலா நடைபெறும். பின்னர், இரவு சுமார் பத்து மணிக்கு ஸ்ரீ பக்த பிரஹலாதா நாட்டிய நாடகம் தொடங்கும்.

முறையான கர்நாடக சங்கீதத்தில் அமைந்த தெலுங்கு கீர்த்தனைகளைப் பாகவதர்கள் பாட, முறையாகப் பரதம் கற்றவர்கள் பாத்திரங்களாய்மாறி நடிக்கும் அந்த நாடகத்தில் எள்ளளவுகூட தமிழுக்கும், பெண்களுக்கும் இடமில்லை. ஆண்கள்தான் பெண் வேடமிடுகின்றனர். பாகவதர்கள் பாட ஆரம்பித்தனர்.

முதலில் விநாயகர் வழிபாடு முடிந்து பாத்திர பிரவேசம் ஆரம்பித்தது. ஹிரண்யகசிபுவின் பிரதாபங்கள் தெலுங்கு கீர்த்தனைகளாக வெளிப்பட அவைக்கு வரும் ஹிரண்யகசிபுவின் வீரம், பராக்கிரமங்கள், திமிர், ஆணவம் அத்தனையும் நடனமொழியில், உருளும் பார்வையில் நம் கண்முன் விரிகிறது. அடுத்து லீலாவதியின் அறிமுகம்... அத்தனை அழகான பெண், அவளது குணம், திறமைகளை அடுத்து பிரகலாதனின் பண்பும் பக்தியும், தொடர்ந்து அசுரகுரு சுக்ராச்சாரியார் எனப்பாத்திரப்பிரவேஷம் முடிந்து கதைக்குள் நுழைந்தபோது நேரம் நள்ளிரவைத்தாண்டியது.

### கட்டுக்கோப்பு

பாகவத மேள நாட்டிய நாடகம் கோணங்கி வருகையுடன் தொடங்குகிறது. (கோணங்கி - தெருக்கூத்தில் வரும் கட்டியக்காரன் போன்றபாத்திரமாகும்.) இவர் பாடலுக்கேற்றவாறு சில அடவுகளைச் செய்து பார்வையாளர்கள் நகைக்கும் வண்ணம் செய்தபின், பார்வையாளர்களைப்

பார்த்து சாது சாது என்று கூறுகிறார். அதாவது அமைதியாக நாடகத்தைக் கண்டு களிக்குமாறு வேண்டியபிறகு மேடையைவிட்டு அகல்வார்.

இதன் பிறகு நாடகத்தில் பங்கேற்கும் இசைக்கலைஞர்களும் பக்கவாத்தியக் கலைஞர்களும் மேடையில் ஒருங்கே தோன்றி வழிபாட்டுதொடக்கப் பாடலான தோடய மங்கலத்தை இசைப்பார்கள். அதன் பிறகு அனைவரும் பிரகலாத பட்டாபிசேகம் பாடல்களைப் பாடுவார்கள். இது பல சொற்கட்டுகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இந்தப்பாடல் முடிந்ததும் ஊர்ப்பெரியவர் ஒருவர் மேடையில் தோன்றி இப்பாகவதர்களுக்குச் சந்தனமும் மலர்களும் நல்குவார். இவை போன்ற தொடக்க நடைமுறைகள் அனைத்து நாடகங்களுக்கு முன்பும் நடைபெறுவதில்லை. பிரகலாத நாடகத்தில் மட்டும் காணலாம்.

**கணபதி வருகை**

தோடயமங்கலம் பாடியபின் கணபதி வருகை இடம்பெறும். நாடகம் தடையின்றி நடைபெற விநாயகரின் அருளை வேண்டி இக்காட்சி அமைக்கப்படுகிறது. 12 வயதிற்குட்பட்ட இளைஞர்களே கணபதி வேடம் புனைவர். இதற்காக இவருக்குக் கணபதிமுகம் போல் செய்யப்பட்ட முகமூடி அணியப்படும். இவர் பக்க இசைக்கேற்ப, சில அடவுகளைச் செய்வார். அதன்பிறகு மேடையிலேயே விநாயகருக்குப் பழம், பூ, வைத்துச் சூடம் ஏற்றி நாடகம் சிறப்பாக முடிவடைய வேண்டும் என்று வேண்டி வணங்குவார்கள்.

**சூத்திரதாரி**

பாகவத மேள நாடகத்தில் மிருதங்க, மத்தள வாத்தியங்களுடன் அரங்க பூசைநடைபெறும். இதையடுத்து, சூத்திரதாரி அரங்கில் தோன்றி கதையின் சுருக்கத்தை இசையுடனான பாடல்கள் மூலம் கூறுவார். நாடக பாத்திரங்களையும் அறிவித்து, நாடகத்தைப் பார்த்து மகிழும்படி சூத்திரதாரர் கூறி முடிப்பார். இவ்வளவும் திரைக்குப் பின்னால் நடைபெறும்.

இதன்பின் தலைமைப் பாத்திரங்கள் ஒவ்வொருவராகத் தோன்றி, தங்களை அறிமுகப்படுத்திக் கொள்கின்றனர். இது பாத்திரப் பிரவேசம் என்று அழைக்கப்படுகிறது.

ஹிரண்யனைக் கட்டுபடுத்தவும் முடியவில்லை, லீலாவதியின் கண்ணீரையும் நிறுத்தமுடியவில்லை கையறுநிலையில் நிற்கும் நிலை. நரசிம்ம அவதாரம் நிகழும். நரசிம்ம வேடம் புனைபவர் இறைவனை வணங்கி விரதம் இருந்து இந்த வேடத்தைப் புனைவார்.

ஒருவர் நரசிம்மஸ்வாமிகளின் முகமூடி அணிந்துகொண்டு அவதாரமெடுப்பார்.அதிகாலை சுமார் நாலரை மணிக்குத் தூணைப் பிளந்துகொண்டு நரசிம்மர் வெளிப்படும் காட்சித் தத்ரூபமாகவே அமைந்திருக்கும். ஸ்ரீ நரசிம்ம அவதாரம் தொடர்ந்து இரண்யனுடன் வாக்குவாதம், யுத்தம் மற்றும் சம்ஹாரம் போன்றவை விறுவிறுப்பாக நிகழும்.பொங்கி.. ஆர்ப்பரித்து, திமிறி ஹிரண்யனின் நெஞ்சைக்கிழிக்க, பரபரத்து அவரைப் பலர் இணைந்து இருக்கையோடு சேர்த்து இருக்கிக் கட்டுவர். அவரை இருக்கிப்பிடித்தும் அவர் ஆக்ரோசமாய் உருமிக்கொண்டிருக்கும் வேளையில் ஹிரண்யகசிபு வேடமணிந்தவரை மேடையை விட்டு அகலச்சொல்லிவிட்டு,சாந்தி.. சாந்தி எனப் பார்வையாளர்களும், நடிகர்களும் அவரிடம் கெஞ்ச ஆரம்பிப்பர். அவரது திமிறலை அவர்களால் அடக்க இயலாது. பிரகலாதனை அவரது மடியில் அமரச்செய்து, பிரகலாதன் - "ஆசிர்வாதம் பண்ணுங்கோ… சாந்தமூர்த்தி நீங்க.. அமைதி.. அனுக்கிரகம் பண்ணுங்க" என்று தமிழில் கெஞ்சி, நரசிம்மஸ்வாமிகளுக்கு தீப ஆராதனைகள் காட்டப்பட்டபின் கொஞ்சம் அந்த ருத்ரம் குறையும். அதன்பின் பார்வையாளர்கள் அவரிடம் குங்குமபிரசாதம் வாங்கிக்கொள்வார். நரசிம்மஸ்வாமிகளும், அவரது முகமூடியும் சிறிய சப்பரத்தில் மேளம் முழங்க கோவிலுக்கு எடுத்து செல்லப்படும்.

நாடகத்தின் உச்சகட்டமாக தூணிலிருந்து நரசிம்மஸ்வாமிகள் எழும் காட்சி நிகழும்போது கிழக்கில் சூரியன் எட்டிப்பார்க்க ஆரம்பிப்பான். அதிகாலை சுமார் ஐந்தேமுக்கால் மணிக்கு முடிவடையும் இந்நாடகம். அடுத்த நாள் காலை 7 மணிக்கு பாகவத சம்பிரதாயப்படி ஸ்ரீ ருக்மணி கல்யாண உற்சவம் நடைபெறும்.

கணவனுக்கும் பிள்ளைக்கும் மத்தியில் சிக்குண்டு லீலாவதி நடத்தும் பாசப்போராட்டம், உலகிடம் ஜெயித்து மகனிடம் தோற்றுப்போகும் ஹிரண்யகசிபுவின் அவஸ்தை அதைதொடர்ந்து அவனுக்கு எழும் ஆத்திரம், பிரகலாதனின் பரிபூரண பக்தி ….

ஆக்ரோசமும் உணர்ச்சித் ததும்பல்களும் நிறைந்த இந்த பிரஹலாத சரித்திர நாடகத்தைக் கண்டு களிப்பதற்கு வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பாசை புரியாதது... இசை புரியாதது... நிருத்தம், அடவு, பதம், ஜதி, பாவம், அபிநயம், கரணங்கள் என்ற நாட்டியக்கலையின் எந்த விசயமும் தெரியாத நிலையிலும், பார்ப்பவர் கண்முன்னே நிகழ்வதான உணர்வை அக்கலைஞர்கள் ஏற்படுத்திக்கொள்வார்கள்.

தொடர்ந்து பக்தர்கள் இதைப் பார்த்துவரும் காரணத்தாலும், நடிகர்கள் பங்கேற்று வரும் காரணத்தாலும் எவருக்குமே மொழி ஒரு பொருட்டாக இருப்பதில்லை. எல்லோருக்கும் புரியும் விதத்திலேயே இது அமைந்திருக்கிறது.

வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், கஞ்சிரா, மோர்சிங், புல்லாங்குழல், நட்டுவாங்கம் என்று வாத்தியங்களுடன் இந்த நாடக விழா நடைபெறும்.

மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமி மற்றும் சென்னையில் உள்ள தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் ஆதரவும் இந்த பாகவத மேளா நிகழ்வுக்கு இருந்து வருகிறது. தவிர பக்தர்களிடம் இருந்து நன்கொடை வசூலித்து விழாவை இனிதே நிறைவேற்றி வருகிறார்கள் பாகவத மேளா அன்பர்கள். வருபவர்களுக்கு அன்னதானம் உட்பட அனைத்து வசதிகளையும் செய்து தருகிறார்கள் விழா அமைப்பினர். பாரம்பரியக் கலைகளின் தன்மை இன்னும் மெருகு குலையாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்பது மெச்சத்தக்கது.

பாகவத மேளத்திற்குரிய நாட்டிய நாடகங்களை அமைத்துக் கொடுத்தவர் மெலட்டூர் வெங்கட்ராம சாத்திரி ஆவார். இவற்றில் பிரகலாத பக்த விசயம் மற்றும் அரிச்சந்திர நாடகங்கள் புகழ்பெற்றவை.

விசய நகர ஆட்சிக் காலத்தில் பாகவத மேளம் தென்னிந்தியாவில் தோன்றியதால், தெலுங்கு மொழியில் பாடல்கள் இயற்றப்பட்டன. அதற்குப் பிறகு வந்த மராட்டியர்களும் இக்கலையை ஆதரித்தனர். ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் இக்கலையை நிகழ்த்துகின்றனர். இக்கலை அந்த ஊர் மக்களின் வாழ்க்கையின் ஒன்றெனக் கலந்துவிட்டது. இவற்றில் பெண் வேடத்தையும் ஆண்களே ஏற்று நடிப்பர். சமூகம் மாற்றம் அடைந்தாலும் இதில் பெண்கள் இடம்பெற மாட்டார்கள். கதாபாத்திரம் அனைவரும் நட்டுவனார் தட்டும் தாளஒலிக்கேற்ப ஒவ்வொரு பகுதியையும் நிகழ்த்துகின்றனர்.

பாகவத மேள நாடகங்களில் வைணவ புராணக் கதைகள் மட்டுமின்றிச் சைவ சமய புராணக் கதைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இவ்வகையில் பார்வதி கல்யாணம், மார்க்கண்டேயா, அரிகரலீலா விலாசம்போன்ற நாடகங்கள் நடைபெறுகின்றன. தெலுங்கு மொழி தந்த நாட்டிய நாடகக் கொடை பாகவத மேளமாகும்.

பாகவத மேள நாட்டிய நாடகம் பரதரின் நாட்டிய சாத்திரம் குறிப்பிடும் செவ்வியல் நாட்டிய நாடக இலக்கணங்களை உள்ளடக்கிய ஒரு கலை வடிவமாக விளங்குகின்றது. ஆகவே, நடிகர்களுக்குப் பொருத்தமான உடை, ஒப்பனை, செவ்வியல், இசை, நடனம், அபிநயம், தேவையான இடத்தில் உரையாடல் என்னும் இக்கூறுகள் நாட்டிய நாடகத்தில் முக்கிய அங்கமாகத் திகழ்கின்றன. இராமாயண, மகாபாரதக் கதைகள் இந்நாட்டிய நாடக வடிவில் இன்றும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

ஆந்திராவின் நாட்டிய நாடகமான குச்சுப்பிடி நடனத்தின் பலகூறுகள் பாகவத மேள நாட்டிய நாடகத்தில் இடம் பெற்றுள்ளன. பரத நாட்டியத்தில் காணப்படும் சப்தம், வர்ணம், பதம் என்னும் கூறுகள் குச்சுப்பிடியில் தெலுங்கில் அமைந்துள்ளன. மேற்கண்ட ஒற்றுமைக் கூறுகளான பாகவத மேள நாட்டிய நாடகம் ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு வந்துள்ளதாகக் கருதப்படுகின்றது. இக்கலையின் மேன்மை நிலை உணரப்பட்டு இக்கலைக்குரிய நிலையில் பாதுகாக்கப்பட்டது.

முந்தைய தலைமுறையில் மெலட்டூர் நடேசய்யர், சூலமங்கலம் சீதாராம பாகவதர், ஊத்துக்காடு சுவாமி பாகவதர் போன்றோர் இக்கலையை மிக உன்னத நிலைக்கு உயர்த்தினர்.

லஷ்மி நரசிம்ம பாகவத மேள பக்த சமாஜம் சார்பில், பாகவத மேளா நாட்டிய நாடகம் நடந்தது. இந்த நாடகம் முழுவதும் தெலுங்கு மொழியில் பாட்டும், வசனமும் கலந்திருந்தன. பரதம், குச்சுப்புடி, யக்சகானம் ஆகிய நாட்டியங்கள் நிறைந்திருந்தன.

பாகவத மேளா நாட்டிய நாடகக் களஞ்சியத்தின் நடுப்பகுதியில் பிரகலாத சரித்திரம், மார்க்கண்டேய உஷா பரணீயம், ருக்மாங்கத கோலாபம், சீதா கல்யாணம், ருக்மிணி கல்யாணம், துருவ சரித்திரம், கம்ச வதம், அரிச்சந்திரா மற்றும் பாணாசுரவதம் ஆகியவை உள்ளடங்கியுள்ளன.

பரத நாட்டியத்துடன் சேர்ந்த நிருத்தத்தில் - அடவு, ஜதிகள் மற்றும் தீர்மானங்களைக் கொண்டு இசைக்குறிப்புகளுக்கு ஏற்றாற்போல உணர்ச்சிப்பூர்வமாக வெளிப்படுத்தும் அபிநய அசைவுகளையும் அங்கமாகக் கொண்டது பாகவத மேளம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பரத நாட்டிய சாத்திர மரபு, தமிழ்நாட்டின் பாகவத மேளாவில் பின்பற்றப்படுகின்றது.

பாகவத மேளத்தின் கட்டமைப்பானது நாராயண தீர்த்தர் இயற்றிய “கிஷ்ணலீலா தரங்கிணி“ யிலிருந்து பெறப்பட்டிருக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது. நாராயண தீர்த்தரும், ஆந்திர தேசத்தைச் சேர்ந்த சித்தேந்திர யோகியும் (குச்சிப்புடியில் “பாமகலாபம்“ என்ற நாட்டிய வகையால் ஈர்க்கப்பட்டவர்) சேர்ந்து இந்த “பாகவத மேளா“ நாட்டிய நாடக மரபை தென்னிந்தியாவில் வளர்ச்சியுறச் செய்திருக்க வேண்டும்.

**துணை நூற் பட்டியல்.**

1. சிவசாமி.வி, பரதக் கலை, பைன் கிராபின்ஸ் - யாழ்ப்பாணம், 2005
2. சிவசாமி.வி, தென்னாசிய சாஸ்திரீய நடனங்கள் - ஒரு வரலாற்று நோக்கு, யாழ்ப்பாணம், 1998
3. பக்கிரிசாமி.கே.ஏ, திருக்கோயில் நுண்கலைகள், சென்னை,2004
4. திருஞானசம்பந்தன்.பெ, இந்திய எழிற்கலை, சென்னை,1977
5. குலேந்திரன்.ஞா, பழந்தமிழர் ஆடல் இசை, தஞ்சாவூர்,1994
6. பத்மா சுப்பிரமணியம், பரதக்கலைகோட்பாடு, சென்னை,1985
7. சரஸ்வதி கலைமாமணி, பரதநாட்டியக் கலை, சென்னை,1983